I. D. Sankey, 1840-1908 Hingham



பாமாலை 449 செட்டையின் கீழ் நானும்

1 செட்டையின் கீழ் நானும் தங்கிடுவேனே,

காரிருள் மூடிப் புயல் மோதினும்

நம்பிடுவேன், என்னைக் காத்துக் கொள்வாரே

மீட்டென்னைப் பிள்ளையாய்ச்
சேர்த்துக்கொண்டார்

பல்லவி

செட்டையின் கீழ், செட்டையின் கீழ்

நின்றெவர் நீக்கிடுவார்?

அன்பின் செட்டையின் கீழ் அமர்வேன்;

பாதுகாப்பாய் என்றென்றைக்கும்.

2 செட்டையின் கீழ் எந்தன் துக்கங்கள் நீங்கி

ஆத்மா இளைப்பாறிப் பூரிக்குதே

லோகம் என் நோவினை மாற்றக்கூடாதே,

இயேசு என் ஆறுதல் மா பாக்யமே

3 செட்டையினுள் மிக மேலாம் சந்தோஷம்

சோதனைக் காலம் நான் காத்திருப்பேன்

தீமையண்டாது நான் யேசுவினுள்ளே

நித்திய காலம் நிலைத்திருப்பேன்.